# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 329/ந/2025, நாள் 08.05.2026

| | | |
|---|---|---|
| S.அன்பழகன்,<br>துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>துறையூர் நகராட்சி,<br>துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 31.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2025 அன்று பெறப்பட்டு, 329/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 31.07.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"திருச்சி மாவட்டம், துறையூரில் திருச்சி சாலையில் திலகம் மளிகைக் கடைக்கு தெற்குபுறம் உள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கடை அமைந்துள்ள கட்டிடம் மெயின் வாசல் திருச்சி சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாயை மூடி அதன்மீது வாசல்படி வைத்து கட்டி உள்ளதோடு அந்த கட்டிடத்தின் தெற்குபுற சுவர் நல்லவாண்டு சந்தில் வடக்கு புறத்தில் இருக்கும் அரசு கழிவுநீர் கால்வாயின் மீது கட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உள்ள கட்டிடம் சுமார் 15 மீட்டர் உயரத்தில் 4 மாடி கட்டப்பட்டுள்ளது. 4 மாடிகளிலும் பல நிறுவனங்கள் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடவில்லை. மேலும் எதிர்பாராமல் ஏதாவது தீவிபத்து ஏற்பட்டால் அதை தடுக்க முடியாத சூழ்நிலையில் கட்டிடத்தின் 4 புறமும் 1 அங்குலம் கூட காலி இடம் (set back) விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. எனவே அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் ஒன்றை கூட கடைப்பிடிக்காமல் விதிமீறி செயல்படும் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி இடித்து அகற்றுமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு 03.06.2025–ல் புகார் அனுப்பி அதனை

அவர் 04.06.2025–ல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புதல் சான்று வந்துள்ளது. நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநருக்கும் அனுப்பி என் புகாரை பெற்றுகொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

மேலும் நான் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையை பின்பற்றாத காரணத்தால்தான் இதுபோல் விதிமீறிய கட்டிடங்கள் செயல்படுவதோடு நகராட்சி ஆணையர்கள் உரிய கால இடைவெளியில் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்திருந்தால் விதி மீறல்களை தடுத்திருக்கலாம் என்றும் இதுவரை இந்த கட்டிடத்தை நகராட்சி ஆணையர்கள் எவ்வித கண்காணிப்பு, ஆய்விற்கு உட்படுத்தாமல் இருப்பதையும் விளக்கியிருந்தேன்.

மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் முறையான அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்களை இடிப்பதுதான் சட்டம் என்றும் அதை கடைப்பிடிக்காத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதோடு, திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்துள்ளதை என் புகாரில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் அரசு அதிகாரிகளின் செயல்பாட்டை மிக உன்னிப்பாக கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ளதோடு, பொதுமக்களின் புகார் மீது நடவடிக்கை எடுக்காத I.A.S. ஆபிசருக்கு 1 மாதம் சிறைத்தண்டனை விதித்ததோடு கூடவே அபராதமும் விதித்ததோடு அதிகாரிகள் கடமையை ஒழுங்காக செய்யாத காரணத்தால் தான் பொதுமக்கள் நீதிமன்றத்தை நாடவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது என்றும் அரசியல் சட்டத்தை அதிகாரிகள் மதித்து நடக்க வேண்டுமென்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் கூறியதை என் புகாரிலேயே ஆணையருக்கு தெரிவித்திருந்தேன்.

மேலும் நான் எனது புகாரிலேயே ஆணையர் அவர்கள், அவரின் உயர் அதிகாரிகளின் அறிவுரையை பின்பற்றாவிட்டாலும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை விட தன்னை சர்வ வல்லமை படைத்தவராக கருதும் போக்கை மாற்றிகொண்டு மாண்புமிகு உயர்நீதிமன்றத்திடம் மரியாதையும், பயமும் கொண்டு சட்டப்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றி விதிமுறைகளை முற்றிலும் மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கடை அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கூறியதோடு இலவசமாக உணவு வழங்கும் குடிலிலே பார்க்கிங் வசதி செய்திருக்கும் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உள்ள கட்டிடத்திற்கு மட்டும் தனி சட்டமா என்று குறிப்பிட்டதோடு, தலைமை செயலாளரின் சுற்றிக்கையை பின்பற்றி என் புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை 30 நாட்களுக்குள் எனக்கு தெரிவிக்குமாறு கேட்டிருந்தேன்.

நான் மிக தெள்ளத் தெளிவாக உயர்நீதிமன்ற உத்தரவை சுட்டிகாட்டி புகார் கொடுத்தும் இதுவரை விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தின் மீது ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றாரோ என்று நினைக்க தோன்றுகிறது. இவற்றிற்கெல்லாம் ஒருபடி மேலாக அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு எண்.12199–12200/2025 நாள் 30.04.2025 உத்தரவை இணைத்து அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் Roc எண்.3555/2025/TP3 நாள் 15.05.2025–ல் கடிதம் அனுப்பியும் விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடத்திற்கு உடந்தையாக ஆணையர் செயல்படுகின்றார் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாக நிரூபணமாகிறது.

எனவே விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றார் என்று நான் ஆணையர் மீது குற்றச்சாட்டு வைத்துள்ளதால்

துறையூர் நகராட்சி ஆணையர் என் புகார் மீது நடவடிக்கை எடுப்பது இயற்கை நீதிக்கு புறம்பாக இருக்கும் என்பதாலும், குற்றவாளியும், நீதிபதியும் ஒருவராக இருக்க முடியாது என்பதை கருத்தில் கொண்டும் மாண்புமிகு சத்தியத்தின் வழியில் கடமை புரியும் மேலான தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் இட நேராய்வு செய்து விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுமாறு பணிவுடன் தாழ்மையுடன் கீழ்ப்படிந்து கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரது மனு குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 26.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.2632/2025/எப்1 நாள் 08.12.2025–ல் தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"ஸ்ரீவித்யா மொபைல்ஸ் நிறுவனம் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. தரைத்தளம், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் தலா 714 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற மொபைல் ஷாப் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 238 சதுர அடி பரப்பளவில் RCC Building அமையப்பெற்ற குடோன் இயங்கி வருகிறது. நான்காம் தளத்தில் 40 சதுர அடி கழிவறை + மொட்டை மாடி (பயன்பாட்டில் இல்லை). கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 932 சதுர அடியாகும். தரைத்தளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னரும், கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவருகிறது. மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளத்தில் உள்ள கழிவறை அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது. மனுதாரரால் வாகனம் நிறுத்துவதற்கு என்று இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் திரு.என். விஜயகுமார், துறையூர் நகராட்சி கிரையப்பத்திரம் எண்.(6440/2015) நாள் 30.09.2015–ல் திரு.என்.மாதேஸ்வரன், எம்.பிரியா என்பவர் கிரையம் பெற்றுள்ளார். வரிவிதிப்பு எண்கள்.087/014/900666, 087/014/901436 மற்றும் 087/014/901437 ஆகிய மூன்று வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளர் ஆகியோரை 06.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S.அன்பழகன் என்பவர் 06.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்–

"துறையூர்–திருச்சி சாலையில் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் சாலையில் உள்ள அரசு கழிவு நீர் கால்வாய் மூடி அதன் மீது வாசல்படி வைத்து 15 மீட்டர் உயரத்தில் விதி மீறி 4 மாடி

கட்டிடம் 1 அங்குலம் இடைவெளிகூட விடாமலும் (set back), பார்க்கிங் வசதி இன்றியும் விதி மீறி கட்டப்பட்டு பல நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட்டிருப்பதால், தீ விபத்து ஏற்பட்டால் தடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே விதி மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடத்தினை இடித்து அகற்றுவதற்கு துறையூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் நேரடி பார்வையில் இட நேராய்வு செய்து மேற்படி கட்டிடத்தினை மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுமாறு பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அனைத்து விதமான விதிமுறைகளையும் மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து மாண்புமிகு சத்தியத்தின் வழியில் கடமை புரியும் மேலான தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் இடநேராய்வு செய்து விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுமாறு பணிவுடன், தாழ்மையுடன், கீழ்படிந்து கேட்டுக்கொள்கிறேன். மேலும் கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் எந்த விசாரணை அமைப்பு மீது சந்தேகம் ஏற்படுவதாக புகார்தாரர் கூறினால், வேறு ஒரு விசாரணை அமைப்பு மூலம் விசாரிப்பது தான் நேர்மையான நீதியை பெற்றுத்தரும் என்று கூறி உள்ள அடிப்படையில் விதி மீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிட நிர்வாகிக்கு ஆணையர் உடந்தை என்று நான் கருதுவதால் தாங்கள் நேரடியாக விசாரிக்குமாறு பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மேலும், மனுதாரர் விசாரணையின்போது 06.01.2026 நாளிட்டு அளித்த எழுத்துபூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

" திருச்சி மாவட்டம், துறையூரில் திருச்சி சாலையில் திலகம் மளிகைக்கடைக்கு தெற்குபுறம் உள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடம் மெயின் வாசல் திருச்சி சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாயை மூடி அதன் மீது வாசல்படி வைத்து, அந்த கட்டிடத்தின் தெற்குபுற சுவர் நல்லவாண்டு சந்து வடக்குபுறத்தில் இருக்கும் அரசு கழிவுநீர் கால்வாயின் மீது கட்டப்பட்டுள்ளது. அந்த கட்டிடம் சுமார் 15 மீட்டர் உயரத்தில் 4 மாடி கட்டப்பட்டுள்ளது. பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமலும், எதிர்பாராமல் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் அதை தடுக்க முடியாத சூழ்நிலையில் கட்டிடத்தின் 4 பக்கமும் 1 அங்குலம் கூட செட்பேக் விடாமல் கட்டப்பட்டுள்ளது.

எனவே அனைத்து விதமான விதிமுறைகளையும் மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்படி இடித்து அகற்றுமாறு நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அளித்த புகார் மீது நடவடிக்கை எடுக்க தவறிய ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து மாண்புமிகு சத்தியத்தின் வழியில் கடமை புரியும் மேலான தாங்கள், தங்களின் நேரடி பார்வையில் இடநேராய்வு செய்து விதிமீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடத்தை மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி இடித்து அகற்றுமாறு பணிவுடன், தாழ்மையுடன், கீழ்ப்படிந்து கேட்டுக்கொள்கிறேன். மேலும் கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் எந்த விசாரணை அமைப்பு மீது சந்தேகம் ஏற்படுவதாக புகார்தாரர் கூறினால், வேறு ஒரு விசாரணை அமைப்பு மூலம் விசாரிப்பதுதான் நேர்மையான நீதியை பெற்றுத்தரும் என்று கூறி உள்ள அடிப்படையில் விதி மீறிய ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிட நிர்வாகிக்கு ஆணையர் உடந்தை என்று நான் கருதுவதால் தாங்கள் நேரடியாக விசாரிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விசாரணையில் கீழ்க்கண்டவாறு எனது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். திருச்சி மாவட்டம், துறையூரில் திருச்சி சாலையில் திலகம் மளிகைக்கடைக்கு தெற்குபுறம் உள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடம் மெயின் வாசல் திருச்சி சாலையில் உள்ள கழிவுநீர் கால்வாயை மூடியும், அதன் மீது வாசல்படி வைத்து அந்த கட்டிடத்தின் தெற்குபுற சுவர் நல்லவாண்டு சந்து வடக்கு புறத்தில் இருக்கும் அரசு கழிவுநீர் கால்வாயின் மீது கட்டப்பட்டுள்ளது. சுமார் 15 மீட்டர் உயரத்தில் 4 மாடி கட்டிடம் பார்க்கிங், செட்பேக் வசதியின்றி TNCDBR சட்டத்திற்கும், தமிழ்நாடு அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள் 1973 சட்டத்திற்கும் விரோதமாக விதிமீறி கட்டப்பட்டுள்ளது.

மேலும் நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் அவரின் உயர் அதிகாரிகளின் உத்தரவை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தைவிட தன்னை சர்வ வல்லமை படைத்தவராக கருதும் போக்கை மாற்றி கொண்டு உயர்நீதிமன்றத்திடம் பயமும், மரியாதையும் கொண்டு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி விதிமீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கோரியதோடு, பொதுமக்களின் புகார் மீது நடவடிக்கை எடுக்காத IAS ஆபிசருக்கு சிறைத்தண்டனை அபராதம் விதித்த உயர்நீதிமன்ற உத்தரவை சுட்டிக்காட்டிய பின்பும் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடத்தின் மீது நான் பொதுநலன் கருதி புகார் கொடுத்தும் ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் அவரின் வாக்குமூலம் அறிக்கை அனைத்தும் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிட நிர்வாகிக்கு சாதகமாக இருக்கும்.

எனவே சத்தியத்தின் வழியில் கடமை புரியும் தாங்கள் தங்களின் நேரடி பார்வையில் இடநேராய்வு செய்து ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் TNCDBR, தமிழ்நாடு அடுக்குமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள் 1973 சட்டப்படியும் அமைந்துள்ள்தா என்றும், கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவுச்சான்று உள்ளதா என்பதை ஆய்வு செய்யவும், ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 67, 69, 102, 104, 197 ஆகிய வழக்கு விசாரணையின் போது 5 கட்டிடகாரர்களும், நான் புகார் கொடுத்ததற்கு பின்பு பார்க்கிங் இடம் வாங்கியதாக இந்த முறைமன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் புதிதாக வாங்கியதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான ஆவணத்தை முறைமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் முறையீட்டு மனு எண்.24/ந/2024–ல் துறையூர் நகராட்சி ஆணையர் அளித்த அறிக்கையில் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைத்தளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று கூறி உள்ளதால் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்புபடி கட்டப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த 5 வழக்குகளிலும் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று தொடர்ந்து கூறி வருவதால் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குநருக்கு ரூ.50 இலட்சம் உயர்நீதிமன்றம் அபராதம் விதித்ததுபோல் இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் உயர்நீதிமன்ற உத்தரவின் கீழ் துறையூர் நகராட்சி ஆணையருக்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எனவே மாண்புமிகு தங்களது விசாரணையில் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199–12200 நாள் 30.04.2025ன்படி இடித்து அகற்றுமாறும் நான் புகாரில் கூறியது பொய் என்றால் என் மீது எந்த ஒரு நடவடிக்கை எடுத்தாலும் அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவோடு, தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.2632/எப்1/2025, நாள் 29.12.2025ல், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் – 2026 (SIR) பணியின் காரணத்தினால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2026 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் திருமதி. திவ்யதர்ஷினி என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து துறையூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திருமதி. திவ்யதர்ஷினி என்பவர் 06.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் 3ம் தளம் என தலா 238 சதுர அடி பரப்பு கொண்ட RCC கட்டிடம். நான்காம் தளத்தில் 40 சதர அடி பரப்பில் RCC கழிவறை என மொத்தம் 932 சதுர அடி பரப்பில் இயங்கி வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத்தில் மூன்றாம் மற்றும் நான்காம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கள ஆய்வின்போது தெரிய வந்தது. வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும் தெரிய வந்தது. தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்திற்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளத்திற்கு அனுமதி பெறப்படாததால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கக்கோரி 03.12.2025ல் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. தக்க ஆவணங்கள் சமர்ப்பிக்காதபட்சத்தில் உரிய சட்டவிதிகளின்படி நகராட்சியால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கட்டிடத்திற்கு 3 வரி விதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்பு குறித்து நில அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".என தெரிவித்துள்ளார்.

8) 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கடை உரிமையாளர் திரு. மாதேஸ்வரன் என்பவர் 06.01.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எங்களது ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கடை திருச்சி சாலையில் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடம் முதலில் திரு.விஜயகுமார் என்பவர் பெயரில் இருந்து வந்தது. அவரிடமிருந்து எங்களால் வாங்கப்பட்டது. கட்டிடம் வாங்கப்படும்பொழுது தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு பெறவில்லை. எங்களது கட்டிடம் நெடுஞ்சாலைக்குட்பட்ட மற்றும் நகராட்சிக்குட்பட்ட மற்றும் கழிவுநீர் வாய்க்காலின் மீது பொதுமக்களின் வசதிக்காக ஸ்லாப் மட்டுமே போடப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களது நிறுவன கட்டிடம் தொடர்பாக, துறையூர் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு நாங்கள் தமிழ்நாடு அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80–Aன்கீழ் 20.12.2025ல் மேல்முறையீடு செய்துள்ளோம். அரசிடமிருந்து எங்களுக்கு இது சம்மந்தமாக பதில் பெறப்படவில்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

9) இதுகுறித்து துறையூர் நகராட்சி ஆணையர் தனது ந.க.எண்.2632/2025/எப்1, நாள் 04.05.2026–ல் தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார்.

"ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளர் தனது வாக்குமூலம் மற்றும் கடிதத்தில் அவரது கட்டிடத்தை தமிழ்நாடு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–ன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஒப்புகை சீட்டு இணைக்கப்பட்டுள்ளதாகவும் மாதேஸ்வரன், ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளர் தெரிவித்துள்ளார் என்ற விவரம் தெரிவித்துக்கொள்கிறேன்''.

10) மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

துறையூர்–திருச்சி சாலையில் செயல்பட்டு வரும் ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் அமைந்துள்ள கட்டிடம் இடைவெளி விடாமல் (set back), பார்க்கிங் வசதியின்றி சுமார் 15 மீட்டர் உயரத்தில் விதிமீறி 4 மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதாலும், சாலையில் உள்ள அரசு கழிவு நீர்கால்வாயை ஆக்கிரமித்து அதன் மீது வாசல்படி வைத்து கட்டப்பட்டுள்ளது என்பதாலும், பல நிறுவனங்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இயங்கி வருகிறது என்பதாலும், விதி மீறி கட்டப்பட்டுள்ள ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் 3–ம் தளம் என மொத்தம் 932 சதுர அடி பரப்பில் இயங்கி வருகிறது என்பதும், இக்கட்டிடத்தின் மூன்று வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், இதன் மூன்று மற்றும் நான்காம் தளங்கள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதும், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும் கள ஆய்வின்போது தெரிய வந்துள்ளது எனவும், மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளத்திற்கு அனுமதி பெறப்படாததால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு ஆவணங்களை சமர்ப்பிக்கக்கோரி 03.12.2025ல் நகராட்சியால் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்பதும், ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளர் தனது கட்டிடத்தை வரன்முறை செய்து கொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 80–ன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் உரிமையாளர் தெரிதவித்திருப்பதாக தெரிதவித்திருப்பதும் துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கட்டிடம் திரு.விஜயகுமார் என்பவரிடமிருந்து வாங்கும் பொழுது தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும், இக்கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு பெறப்படவில்லை எனவும், கட்டிடம் நெடுஞ்சாலைக்குட்பட்ட மற்றும் நகராட்சிக்குட்பட்ட கழிவுநீர் வாய்க்காலின் மீது பொது மக்களின் வசதிக்காக ஸ்லாப் மட்டுமே போடப்பட்டுள்ளது எனவும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80–ன் கீழ் 20.12.2025 அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது என இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ வித்யா மொபைல்ஸ் கடை உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், கட்டிடத்தின் உரிமையாளர், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, (Tamil Nadu Town and Country Planning Act, 1971) பிரிவு 80–ன் கீழ் அரசிற்கு சீராய்வு

மனு அளிக்கப்பட்டதை உறுதி செய்து அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்க துறையூர் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2026–ஆம் ஆண்டு, மே திங்கள் 08–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.அன்பழகன்,
த/பெ. திரு.சீனிவாசன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின்ரோடு,
துறையூர் (அஞ்சல் & வட்டம்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 010.

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) திரு.மாதேஸ்வரன்,
த/பெ.திரு.நாகராஜ்,
ஸ்ரீ வித்யா மொபைல்ஸ்,
எண்.199, திருச்சி ரோடு,
துறையூர் – 621 010.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.